# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட ஒப்பந்தத்தில் பிரதான கழிவுநீர் உந்துநிலையத்தில் 1.5 மீட்டர் உயரத்திற்கு சுற்றுசுவர் கட்டுவதற்கு ரூ.8.58 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கழிவுநீர் உந்து நிலையத்தை சுற்றியுள்ள மக்களின் பாதுகாப்பு கருதி சுற்றுசுவர் உயரத்தை 1.5 மீட்டரிலிருந்து 2.4 மீட்டருக்கு உயர்த்தி கட்டும்படி 5.12.2019 –ல் நடத்திய ஆய்வின் போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளரிடம் பரிந்துரை செய்யப்பட்டது. மேலும் பிரதான கழிவுநீர் உந்துநிலையத்திற்குள் தண்ணீர் வராமல் தடுக்க கிழக்குப் பகுதியில் தரை மட்டத்திற்கு கீழே 1.8 மீட்டர் உயரத்திற்கு கல்சுவர் 47 மீட்டர் நீளத்தில் RCC தூண்களுக்கு இடையே கட்டுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

எனவே தற்போது பிரதான கழிவுநீர் உந்து நிலையத்தின் சுற்றுசுவர் உயரத்தை 2.4 மீட்டர் உயரத்திற்கு கட்ட திட்ட மதிப்பீடு ரூ.22.32 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, மேற்பார்வை பொறியாளர், மதுரை அவர்களிடம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கழிவுநீர் உந்து நிலையத்தின் சுற்று சுவரினை 2.4 மீட்டர உயரத்திற்கு கட்ட மன்றத்தின் அங்கீகாரத்திற்காக..

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4596/2010/இ1

## தீர்மானம் எண்.539 – அங்கீகரிக்கப்பட்டது

2. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களிலும் (UPHC) COVID –19 தடுப்பு பணி தொடர்பான அறிக்கைகள் அனுப்ப புள்ளி விபர தொகுப்பாளர்கள் ஏற்கனவே பணி செய்து வருகின்றனர். பெருந்தொற்றின் தாக்கம் தொடர்ந்து இருப்பதால் மேலும் கூடுதலாக 3 மாதங்களுக்கு (11/2020 To 1/2021) மேற்படி 5 நபர்கள் பணியாற்ற அனுமதி வேண்டியும் இதற்கான செலவினம் (615 x5x90) ₹..2,76,750/-ற்கும் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1127/2018/எச்4

## தீர்மானம் எண்.540 – அங்கீகரிக்கப்பட்டது

3. இம்மாநகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020-21-ன் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.9025/2020/இ3, நாள்.17.07.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை பொறியாளரின் செயல்முறை ஆணை எண்.10034/2020/DD2

நாள்.25.07.2020 –ன் படி நிர்வாக அனுமதி மற்றும் தொழிற்நுட்ப அனுமதியின் படி ரூ.225.00 இலட்சத்திற்கு பணிகள் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கடந்த 03.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | மதிப்பீட்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரார்கள் விபரம் | ஒப்பந்த விகிதம் | | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைவு | அதிகம் | |
| 1 | 135/2020 -21/Œ | வார்டு எண்.1 கட்டையன்விளை சாலை, வார்டு எண்.7 புளியடி சாலை, வார்டு எண்.9 ஆராட்டு ரோடு, வார்டு எண்.18 வையாலிவிளை சந்தி தெரு, வார்டு எண்.19 லாலா விளை சாலை, வார்டு எண்.22 ஞானம் காலனி, வார்டு எண்.25 நடுகாட்டு இசக்கியம்மன் சாலை வார்டு எண்.25 ஜோ டேனியல் தெரு, வார்டு எண்.26 கிறிஸ்து நகர் மெயின் சாலை மற்றும் வார்டு எண்.49 தட்டான்விளை சாலை ஆகிய பகுதிகேளில் தார்தளம் அமைக்கும் பணி – சிப்பம்1 | 225.00 | Rபாலகிருஷ்ணன் | **20.09** | **-** | **1936913** |
| | | | | Mவெற்றிவேலன் | 14.49 | - | - |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 20.09% Rபாலகிருஷ்ணன் கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்பு தொகை ரூ.19,36,913/- செலுத்திய பின்னர் பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4007/2020/இ3

## தீர்மானம் எண்.541 – அங்கீகரிக்கப்பட்டது

4. இம்மாநகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020-21-ன் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.9025/2020/இ3, நாள்.17.07.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை பொறியாளரின் செயல்முறை ஆணை எண்.10034/2020/DD2 நாள்.25.07.2020 –ன் படி நிர்வாக அனுமதி மற்றும் தொழிற்நுட்ப அனுமதியின் படி ரூ.275.00 இலட்சத்திற்கு பணிகள் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கடந்த 03.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | மதிப்பீட்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் விபரம் | ஒப்பந்த விகிதம் | | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைவு | அதிகம் | |
| 1 | 136/2020-21/ŒE | வார்டு எண்.20 CTM Puram சாலை, வார்டு எண்.38 வேதநகர் முதல் வட்டவிளை சாலை, சிவன் தெரு மற்றும் ஸ்ரீகிருஷ்ணா சாலை, வார்டு எண்.39 பட்டகசாலியன் முதல் கலைநகர், அல்போன்ஷா கார்டன், கலைநகர் புதுதெரு, வார்டு எண்.40 வட்டக்கரை சாலை, வார்டு எண்.42 | 225.00 | Rபாலகிருஷ்ணன் | 20.09 | - | 2381826 |
| | | | | Sதியாகராஜன் | 15.22 | - | - |
| | | | | I.கேட்சன் | 4.22 | - | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஹவுசிங் போர்டு காலனி சாலை, வார்டு எண்.43 சைமன் நகர் சாலை வார்டு எண்.44 ஜேக்கப் தெரு, வார்டு எண்.48 சரலூர் முதல் DVD காலனி சாலை மற்றும் வார்டு எண்.42, 50 பொன்னப்பநாடார் காலனி ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைக்கும் பணி – சிப்பம் 2 | | | | | |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட **20.09%** Rபாலகிருஷ்ணன் கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்பு தொகை ரூ.**2381826/-** செலுத்திய பின்னர் பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4007/2020/இ3

## தீர்மானம் எண்.542 – அங்கீகரிக்கப்பட்டது

5. நாகர்கோவில் மாநகராட்சிக்கு துறைமூலம் வசூல் செய்வதற்கு தேவையான கட்டண இரசீதுகள் அச்சடித்து விநியோகம் செய்திட 20.10.2020 அன்று உள்ளூர் அச்சகங்களிடம் இருந்து விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படியான விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு அச்சகம் மூலம் இந்த ஆண்டிற்கான விலை விபரங்களை ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

| விபரம் | Adhi Traders | Raj Printers | Kings offset printer | Sangunceger society | Trichy Multipurpose | Child home society |
|---|---|---|---|---|---|---|
| கட்டண இரசீது 1000 இரசீது 1 புத்தகம் | 129 | 135 | 125 | 290 | 300 | 295 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கட்டண இரசீது (1+1) 1000 இரசீது புத்தகம் | 140 | 145 | 135 | - | - | |

மேற்படி கிடைக்கப்பெற்ற விலைப்புள்ளிகளில் M/s.Kings offset Printers, Nagercoil நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் M/s.Kings offset Printers, நிறுவனத்திடம் இருந்து தேவையான கட்டண இரசீதுகள் அச்சடித்து வாங்கிட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3450/2020/பி2

## தீர்மானம் எண்.543 – அங்கீகரிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் கழிவுநீர் உறிஞ்சு வாகனமான TN74D0199 –ல் தகுதிச் சான்று புதுப்பிக்க ஏதுவாக பழுது நிக்கப் பணிகள் மேற்கொள்ள 26.08.2020 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் புதுக்குடியிருப்பு நாகர்கோவில் | ரூ.83795/- |
| 2 | அக்சயா மோட்டார்ஸ் குலசேகரம் ரோடு உண்ணாமலைக்கடை | ரூ.84360/- |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நாகர்கோவில் "கணேஷ் மோட்டார்ஸ்" நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்தார்க்கு பணி உத்தரவு வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.20366/2016/எச்4

## தீர்மானம் எண்.544 – அங்கீகரிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான வாகன எண்.TN74 L 5137 (Open Lorry) –ற்கு மின்கலப்பெட்டி ஒரு எண்ணம் மட்டும் (12Volt 1000AH) ஓட்டுநரின் விண்ணப்பத்தின் பேரிலும், வாகன கண்காணிப்பாளர், உதவி பொறியாளர் மற்றும் மாநகர பொறியாளர் ஆகியோர்களின் ஒப்புதலின் பேரிலும் வாங்குவதற்கும், இதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.7,000/–ற்கும்

பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும், விலைப்புள்ளி கோரவும் மாமன்ற ஒப்புதலுக்காகவும், அவசர அவசியத்தின் பேரில் மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரி அறிவிப்பு வெளியிட்டதையும் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3449/2016/எச்4

## தீர்மானம் எண்.545 – அங்கீகரிக்கப்பட்டது

8. நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் திருநெல்வேலி இந்தியன் சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு ஊடு எரிபொருளாக பயன்படுத்துவது தொபாக மாமன்ற தீர்மானம் எண்.516 நாள்.29.10.2020-ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு இம்மாநகராட்சிக்கு சொந்தமான லாரி அல்லது தனியார் வாகனத்தில் பிளாஸ்டிக் கழிவுகள் கொண்டு செல்வதற்கு ஆகும் அனைத்து செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5482/2017/எச்3

## தீர்மானம் எண்.546 – அங்கீகரிக்கப்பட்டது

9. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49-ல் ஜவஹர் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் ஓடையினை சரி செய்திட கடந்த 28.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Rவிஜயகுமார் | மதிப்பீட்டை விட 1.06% குறைவு |
| 2 | திரு.Rஜெங்கின்ஸ் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி திரு.Rவிஜயகுமார் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 1.06% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.45/2020-2021

## தீர்மானம் எண்.547 – அங்கீகரிக்கப்பட்டது

10. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48-ல் சரலூர் மாட்டு சந்தையின் அருகே உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள வளாகத்தின் சுற்று சுவர் பழுதினை சரி செய்திட கடந்த 06.10.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Kமணிகண்டன் | மதிப்பீட்டை விட 0.60% குறைவு |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.Kமணிகண்டன் ஒப்பந்ததாரா் மதிப்பீட்டை விட 0.60% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.69/2020-2021

**தீர்மானம் எண்.548 – அங்கீகரிக்கப்பட்டது**

11. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38-ல் இருளப்பபுரம் சந்திப்பில் உள்ள மழைநீர் வடிகால் ஓடையினை சரி செய்திட கடந்த 06.10.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.கபீஷ் | மதிப்பீட்டை விட 25.14% குறைவு |
| 2 | திரு.ஜெகதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 18.28% குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி திரு.கபீஷ் ஒப்பந்ததாரா் மதிப்பீட்டை விட 25.14% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்புத்தொகை ரூ.29440/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.70/2020-2021

**தீர்மானம் எண்.549 – அங்கீகரிக்கப்பட்டது**

12. இம்மாநகராட்சிக்கு நாள்தோறும் பொதுமக்கள் வந்து செல்வதால் அவர்களது வருகையினை கண்காணிக்கும் பொருட்டு பொது சுகாதார பிரிவு, தலைமை கட்டிடத்தின் தரைதளம் மற்றும் முதல்தளம் இவைகளில் கண்காணிப்பு கேமரா பொருத்தி கண்காணிக்கும் பொருட்டு கேமரா பொருத்தவும் அதற்காகும் செலவீனம் ரூ.44,800/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9486/2020/இ1

**தீர்மானம் எண்.550 – அங்கீகரிக்கப்பட்டது**

13. இம்மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரி விளை உரக்கிடங்கு முக்கடல் அணைப்பகுதி Filter House மற்றும் மாநகராட்சி அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கேமராக்கள் மற்றும் இதர உதிரிப்பாகங்கள் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கடந்த 30.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | வள்ளி எலக்டிரானிக்ஸ் | மதிப்பீட்டை விட 0.28% குறைவு |
| 2 | M/s.Inventsun Energy solution | மதிப்பீட்டை விட 0.28% அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வள்ளி எலக்டிரானிக்ஸ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.28% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.16/2020-2021

**தீர்மானம் எண்.551 – அங்கீகரிக்கப்பட்டது**

14. இம்மாநகராட்சி கிருஷ்ணன் கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pump House I-லுள்ள 30HP Submersible motor பழுதடைந்துள்ளதை சரிசெய்வதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.81000/- (எண்பத்தி ஒன்றாயிரம் மட்டும்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9537/2020/இ2

**தீர்மானம் எண்.552 – அங்கீகரிக்கப்பட்டது**

15. இம்மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையில் LTCT இணைப்பில் Fuse (HRC) மற்றும் (NRV) Non return valve பழுதடைந்துள்ளதை சரி செய்தல் மற்றும் Cable பழுதடைந்துள்ளதை புதிய UG Cable மாற்றவும் 01.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு (தொகை ரூ.98660/-) |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7178/2020/இ2

**தீர்மானம் எண்.553 – அங்கீகரிக்கப்பட்டது**

16. இம்மாநகராட்சி பொறியர் பிரிவில் குடிநீர் விநியோகம் மற்றும் காவலாளி பணிக்கு வைகை ஆண்கள் சுய உதவி குழுவின் மூலம் தேவையான நபர்களை பெற்று மாநகராட்சி அலுவலகம், அதிகாரிகள் குடியிருப்பு பகுதி, முக்கடல் அணை மற்றும் கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் 15 நபர்களைக் கொண்டு பாதுகாவலர் பணி நடைபெற்று வருகிறது. மாவட்ட ஆட்சி தலைவரின் செயல்முறை ஆணை எண்.A1/9953/2020 நாள்.14.07.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி குழுவிற்கு நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு கூலி ரூ.615/- வீதம் வழங்கவும். மேற்படி தொகை ரூ.2,76,750/-ம் 1 ஓராண்டிற்கு செலவீனம் தொகை ரூ.34,00,000/- (முப்பத்திநான்கு லட்சம்) ஆகும். தற்போது 2020 அக்டோபர் மாதம் பணிபுரிந்தமைக்காக செலவின பட்டியலின்படி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்க அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8460/2018/இ2

**தீர்மானம் எண்.554 – அங்கீகரிக்கப்பட்டது**

17. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான பெத்ஸ்தா வணிக வளாக கடைஎண்34, 35 மற்றும் 36-க்கு 18-03-2020 தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறுபொது ஏலம்மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 02-11-2020 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. பொது ஏலத்தில் யாரும் கலந்துகொள்ளவில்லை. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை கீழ்கண்டவாறு.

| வ.எண் | பெயர்மற்றும் முகவரி | கடை எண் | பொதுஏலம்நடவடிக்கை | ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 01 | | 34 | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள யாரும் முன் வரவில்லை | |
| 02 | S. Abishek Venkadesh (Nanjil Electrical LLP) 59/64A Kanagamoolam Kudieruppu Thazhakkudi P.O Kanyakumari District | 35 | பொதுஏலத்தில்யாரும்கலந்துகொள்ளவில்லை | 6500/- |
| 03 | S. Abishek Venkadesh (Nanjil Electrical LLP) 59/64A Kanagamoolam Kudieruppu Thazhakkudi P.O Kanyakumari District | 36 | பொதுஏலத்தில்யாரும்கலந்துகொள்ளவில்லை | 6500/- |

மேற்காணும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் பொதுஏலத்தில் யாரும் கலந்துகொள்ள முன்வரவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெதஸ்தா வணிக வளாக கடை எண் 34-க்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பத்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ள வில்லை எனவே கடை எண் 34-க்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்,

பெதஸ்தா வணிக வளாக கடை எண் 35-க்கு திரு, S அபிஷேக் வெங்கடேஷ் (Nanjil Electrical LLP) என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 6500/- என கேட்டுள்ளார். மேற்படி கடையின் முந்தின உரிமதாரர் மாத வாடகையாக ரூ 6200/- என அனுபவித்து வந்தார், தற்போது கேட்டுளள மாத வாடகை ரூ 6500/- முந்தைய மாத வாடகையைவிட கூடுதலாக உள்ளது, எனவே உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ 6500/- என கேட்டுள்ள திரு. S அபிஷேக் வெங்கடேஷ் (Nanjil Electrical LLP) என்பவருக்கு உரிமம் வழங்கிட மாமன்றம் பர்சீலனை செய்து அங்கீகரிக்கலாம்,

பெதஸ்தா வணிக வளாக கடை எண் 36க்கு திரு, S அபிஷேக் வெங்கடேஷ் (Nanjil Electrical LLP) என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 6500/- என கேட்டுள்ளார். மேற்படி கடையின் முந்தின உரிமதாரர் மாத வாடகையாக ரூ 6200/- என அனுபவித்து வந்தார், தற்போது கேட்டுள்ள மாத வாடகை ரூ 6500/- முந்தைய மாத வாடகையைவிட கூடுதலாக உள்ளது, எனவே உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ 6500/- என கேட்டுள்ள திரு. S அபிஷேக் வெங்கடேஷ் (Nanjil Electrical LLP) என்பவருக்கு உரிமம் வழங்கிட மாமன்றம் பர்சீலனை செய்து அங்கீகரிக்கலாம்,

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.12848/2019/அ6

**தீர்மானம் எண்.555 – அங்கீகரிக்கப்பட்டது**

18. இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான Hypho Chlorine வாங்குவதற்கு 09.10.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | M/s.Sri Senthur Murugan Chemical tech, Namakal | மதிப்பீட்டை விட 17.50% குறைவு |
| 2 | M/s.PV Hypo chrorite, Chennai | மதிப்பீட்டை விட 9.63% குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள M/s.Sri Senthur Murugan Chemical tech நிறுவனம் (-)17.50% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால், அதனை ஏற்று விநியோகம் உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.72/2020-2021

**தீர்மானம் எண்.556 – அங்கீகரிக்கப்பட்டது**

19. இம்மாநகராட்சிக்குட்பட்ட வட்டவிளை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதடைந்த மின் உதிரி பொருட்களை சரி செய்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.42,643/-க்கு (நாற்பத்தி இரண்டாயிரத்தி அறுநூற்றி நாற்பத்தி மூன்று) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9421/2020/இ4

## தீர்மானம் எண்.557 – அங்கீகரிக்கப்பட்டது

20. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனமான காம்பேக்டர் லாரி TN74AS 5646 ற்கு மின்கலப்பெட்டி (12Volt +100 Amp) ஒரு எண்ணம் விநியோகம் செய்ய 17.09.2020 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு.

| விலைப்புள்ளிகள் வழங்கியுள்ள நி.றுவனங்களின் பெயர்கள் | | |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இராஜா பேட்டரி சர்வீஸ் இந்துகல்லூரி எதிர்புறம் நாகர்கோவில் -2 | பிஜி மார்க்கெட்டர்ஸ் செட்டிக்குளம் ஜங்சன் நாகர்கோவில்-2 | கென்னடி பேட்டரி சர்வீஸ் செட்டிக்குளம் ஜங்சன் நாகர்கோவில் -2 |
| Exide Express Battery 8250.00<br>Old Battery lees 1500.00<br>------------<br>6750.00 | Exide Battery<br>8300.00<br>Old Battery lees 1500.00<br>------------<br>6800.00 | Exide Battery (Express)<br>8400.00<br>1500.00<br>------------<br>6900.00 |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் Raja Battery Service, Nagercoil நிறுவனத்தாரின் விலைப்புள்ளி (6750/-) குறைவானது என்பதால் அவசர அவசியத்தின் பேரில் மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்தார்க்கு பணி உத்தரவு வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.878/2019/எச்4

## தீர்மானம் எண்.558 – அங்கீகரிக்கப்பட்டது

21. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனமான ஒபன் லாரி TN74L 5160 ற்கு மின்கலப்பெட்டி (12Volt +100 Amp) ஒரு எண்ணம் விநியோகம் செய்ய 26.08.2020 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு.

| விலைப்புள்ளிகள் வழங்கியுள்ள நி.றுவனங்களின் பெயர்கள் | | |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இராஜா பேட்டரி சர்வீஸ் இந்துகல்லூரி எதிர்புறம் நாகர்கோவில் -2 | மரிய பேட்டரி சர்வீஸ் இந்துக்கல்லூரி சாலை செட்டிக்குளம், ஜங்சன் | பிஜி மார்க்கெட்டர்ஸ் செட்டிக்குளம் ஜங்சன் நாககோவில்-2 |
| ரூ.7275/- | ரூ.7400/- | ரூ.7350/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் Raja Battery Service, Nagercoil -2 நிறுவனத்தாரின் விலைப்புள்ளி (7275/-) குறைவானது என்பதால் அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்தார்க்கு பணி உத்தரவு வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3451/2016/எச்4

**தீர்மானம் எண்.559 – அங்கீகரிக்கப்பட்டது**

22. பிரதான் மந்திரி மக்கள் வளர்ச்சி நிரல் (PMJVK) திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சிக்குட்பட்ட காந்திபுரம் செட்டிதெரு பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த அங்கன் வாடி மையத்தினை அப்புறப்படுத்தி புதிதாக அதே இடத்தில் அங்கன்வாடி மையம் ரூ.7,50,000/- மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு கடந்த 24.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.V.ஜோசப் அருள்ராஜ் | மதிப்பீட்டை விட 16.26% குறைவு |
| 2 | திரு.Rவிஜயகுமார் | மதிப்பீட்டை விட 16.01% குறைவு |
| 3 | திரு.T.நடராஜன் | மதிப்பீட்டை விட 11.01% குறைவு |
| 4 | திரு.P.இராஜகோபாலன் | மதிப்பீட்டை விட 4.96% குறைவு |

**அலுவலக குறிப்பு -** பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 16.26% குறைவாக கொடுத்துள்ள திரு.V.ஜோசப் அருள்ராஜ் என்பவருக்கு கூடுதல் வைப்புதொகை ரூ.43,650/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.66/2020-2021

**தீர்மானம் எண்.560 – அங்கீகரிக்கப்பட்டது**

23. பிரதான் மந்திரி மக்கள் வளர்ச்சி நிரல் (PMJVK) திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சிக்குட்பட்ட வாட்டர் டேங் சாலை பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த அங்கன் வாடி மையத்தினை அப்புறப்படுத்தி புதிதாக அதே இடத்தில் அங்கன்வாடி மையம் ரூ.7,50,000/- மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு கடந்த 24.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.P.கண்ணன் | முன்வைப்பு தொகை செலுத்தவில்லை |
| 2 | திரு.M.அசோக்குமார் | மதிப்பீட்டை விட 11.50% குறைவு |
| 3 | திரு.T.நேசமணி | மதிப்பீட்டை விட 8.76% குறைவு |
| 4 | திரு.K.மணிகண்டன் | மதிப்பீட்டை விட 15.00% குறைவு |
| 5 | திரு.சுகுந்தன் | முன்வைப்பு தொகை செலுத்தவில்லை |
| 6 | திரு.P.இராஜகோபாலன் | மதிப்பீட்டை விட 4.96% குறைவு |

**அலுவலக குறிப்பு -** பெறப்பட்ட ஆறு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை 1 மற்றும் 5-ல் கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப காரணத்தினால் தகுதி நீக்கம் செய்து மீதமுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 15.00% குறைவாக கொடுத்துள்ள திரு.K.மணிகண்டன் என்பவருக்கு கூடுதல் வைப்புதொகை ரூ.15,000/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.65/2020-2021

**தீர்மானம் எண்.561 – அங்கீகரிக்கப்பட்டது**

24. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையத்தை சுற்றி Tin sheet மற்றும் அருந்ததியார் காலனியில் Net மூலம் பாதுகாப்பு வேலை அமைத்தல் பணிக்கு கடந்த 22.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | EBK Builders | மதிப்பீட்டை விட 0.30% குறைவு |

**அலுவலக குறிப்பு -** பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு. EBK Builders ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.30% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.60/2020-2021

**தீர்மானம் எண்.562 – அங்கீகரிக்கப்பட்டது**

25. இம்மாநகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக வடசேரி கனகமூலம் சந்தையினை சுற்றிலும் Tin sheet அமைத்திடவும் அதற்கான செலவீனம் ரூ.39,500/. பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு -** அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10148/2020/இ1

## தீர்மானம் எண்.563 – அங்கீகரிக்கப்பட்டது

26. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பறையின் மேல்கூரையில் சூரிய ஒளி புகும் வண்ணம் Transparent sheet அமைத்திடவும் அதற்கான செலவீனம் ரூ.56,500/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு -** அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10147/2020/இ1

## தீர்மானம் எண்.564 – அங்கீகரிக்கப்பட்டது

27. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம் எதிரே உள்ள டாக்டர் அம்பேத்கார் உருவசிலையை சுற்றி Gill அமைத்திடவும் அதற்காகும் செலவீனம் ரூ.97,000/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு -** அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10145/2020/இ1

## தீர்மானம் எண்.565 – அங்கீகரிக்கப்பட்டது

28. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் புளியடி எரிவாயு தகனமேடைக்கு செல்லும் வழியில் உள்ள சிறுபாலமானது முற்றிலும் சேதமடைந்து அப்பகுதியில் செல்வோருக்கு பாதுகாப்பற்ற சூழலில் உள்ளது. மேலும் கொரோனா தொற்றினால் பாதிப்படைந்து இறந்தவர்களை மாநகராட்சிக்கு சொந்தமான புளியடியில் அமைந்துள்ள எரிவாயு தகனமேடையில் தகனம் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பாலத்தினை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,90,000/-க்கு (ஏழு லட்சத்தி தொண்ணூறாயிரம்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணியினை திரு.அசோக்குமார் ஒப்பந்ததாரர் மூலம் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு -** அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்..9926/2020/இ1

## தீர்மானம் எண்.566 – அங்கீகரிக்கப்பட்டது

29. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.44-ல் பெதஸ்தா வணிக வளாகத்தின் மேல் தளத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கடந்த 26.06.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Kமணிகண்டன் | மதிப்பீட்டை விட 15.08% குறைவு |
| 2 | திரு.Rஜெங்கின்ஸ் | மதிப்பீட்டை விட 14.99% குறைவு |
| 3 | திரு.I.பாஸ்கரன் | மதிப்பீட்டை விட 4.708% குறைவு |
| 4 | EBK Builders | மதிப்பீட்டை விட 3.90% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u> – பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 15.08% குறைவாக கொடுத்துள்ள திரு.Kமணிகண்டன் என்பவருக்கு கூடுதல் வைப்புதொகை ரூ.88,903/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.233/2020-2021

## தீர்மானம் எண்.567 – அங்கீகரிக்கப்பட்டது

30. மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு.சு.சொர்ணராஜ் என்பவருக்கு 2020-2021-I அரையாண்டிற்கு தொழில்வரி கேட்பு ரூ.1250/- 20.09.2020 அன்று மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் தனியார் இதற்கு முன்பு பணியாற்றிய கோயம்புத்தூர் தாட்கோ அலுவலகத்தில் ஆகஸ்ட் மாத ஊதியத்திலும் மேற்படி அரையாண்டிற்கான தொழில்வரி ரூ.1250/- பிடித்தம் செய்யப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே நாகர்கோவில் மாநகராட்சியில் செலுத்தப்பட்ட தொழில்வரி ரூ.1250/-ஐ தனியாருக்கு திரும்ப வழங்க தனியாரால் மாவட்ட வழங்கல் அலுவலக கடிதம் எண் ந.க.எண்.ஊ4/26870/2020 நாள். 27.10.2020 –ன் படி கோரப்பட்டுள்ளது. எனவே மிகையாக பிடித்தம் செய்யப்பட்ட தொழில்வரி கேட்பு ரூ.1250/-ஐ தனியாருக்கு (Sசொர்ணராஜ்) திரும்ப வழங்கிட மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு -** அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9619/2020/அ7

## தீர்மானம் எண்.568 – அங்கீகரிக்கப்பட்டது

31. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட கோட்டார் புனித சவேரியார் கோயில் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 24-ம் தியதி முதல் டிசம்பர் மாதம் 3-ம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற்று வருகிறது. மேற்படி திருவிழாவின் போது அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரி முன்புறத்திலிருந்து கோட்டார் ஈத்தாமொழி ரோடு சந்திப்பு வரையிலும், செட்டிக்குளம் சந்திப்பு கிழக்கு பக்கத்திலிருந்து சவேரியார் கோயில் சந்திப்பு வரையிலும் (பயோனியர்

முத்துமஹால் முன் பகுதி மற்றும் கோயில் நுழைவு வாயில் பகுதி நீங்கலாக) சாலையோரம் இருபுறமும் உள்ள இடங்களில் அமைக்கப்படும் 5`x5` அளவுள்ள தற்காலிக ஸ்டால்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100/- வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன்படி அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி இம்மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது கோவிட் -19 நோய் தொற்று பரவி வருவதாலும், 144 தடை உத்தரவு அமலில் இருப்பதாலும், அரசாணை எண்.643/வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள்.13.11.2020 அரசாணையின்படி சமூக / அரசியல் / பொழுதுபோக்கு / கலாச்சார / மதகூட்டங்கள் கூடுவதற்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.சி3/28502/2020, நாள்.21.11.2020 இன் படி திருவிழா கடைகள் அமைத்திட அனுமதி வழங்கப்படாததாலும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு மட்டும் தற்காலிக கடைகள் அமைத்திடும் உரிமத்தினை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையிலிருந்து நீக்கம் செய்திட அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு -** அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.18664/2020/அ8

## தீர்மானம் எண்.569 – அங்கீகரிக்கப்பட்டது

32. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான நாகராஜா கோவில் திடலில் பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் உரிமையாளர்களால் கனரக மற்றும் இலகுரக வாகனங்களை நிறுத்தம் செய்து வருகின்றனர். மேற்படி வாகனங்களுக்கு கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படாமல் உள்ளது. மேற்படி திடலில் நிகழ்ச்சிகள், நடத்துவதற்கு என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள படி நிகழ்ச்சிகள் நடைபெறும் நாட்கள், நாகராஜா கோவில் திருவிழா நிகழ்ச்சிகள் நடைபெறும் நாட்கள் மற்றும் மாநகராட்சிக்கு தேவைப்படும் நாட்களை தவிர்த்து மீத நாட்களில் தற்காலிகமாக இம்மாநகராட்சிக்கு வருவாய் வரும் வகையில் மேற்படி நிறுத்தப்படும் வாகனங்களுக்கு இம்மாநகராட்சி பணியாளர்களை கொண்டு துறை மூலம் 16.11.2020 -ம் தேதி முதல் கட்டணம் வசூல் செய்திடவும், நாள் ஒன்றிற்கு மூன்று / நான்கு சக்கர இலகுரக வாகனத்திற்கு ரூ.40/- வீதம் மற்றும் கனரக வாகனங்களுக்கு ரூ.50/- வீதம் கட்டணம் வசூல் செய்திடவும், துறை மூலம் வசூல் செய்திட தேவையான ரசீது புத்தகங்களை காசாளர் வழியாக அச்சடித்திடவும் ஆணையர் அவர்களின் முன்அனுமதியுடன் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1266/2017/அ8

## தீர்மானம் எண்.570 – அங்கீகரிக்கப்பட்டது

33. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74 J.2839-ற்கு 4 எண்ணம் டயர் மற்றும் Spare டயர் (ஒன்று) உள்பட ஐந்து எண்ணம் டயர் வாங்கி பொருத்துவதற்கு 21.10.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | Ganesh motor works<br>Nagercoil | Rs.28106/- |
| 2 | Aksgaya motors<br>Unnamalai Kadai | Rs.28558/- |

பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட தொகை ரூ.28106/- குறைவாக கொடுத்துள்ள Ganesh motor works Nagercoil வழங்கியதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி விநியோக உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5021/2006/இ2

## தீர்மானம் எண்.571 – அங்கீகரிக்கப்பட்டது

34. இம்மாநகராட்சிக்குட்பட்ட முக்கடல் அணையிலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 600 MM PSC Pipe Line லுள்ள பிரதான குழாய்யான திட்டுவிளை நாகர்கோவில் ரோட்டிலுள்ள துவரங்காடு Petrol Pump பகுதியில் /// பழுது ஏற்பட்டு குடிநீர் விரயம்மாவதால் அதனை சரிசெய்ய உத்தேச செலவினம் தொகை ரூ.1,10,000/- 9ஒரு லட்சத்தி பத்தாயிரம்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 9755/2020/இ2

## தீர்மானம் எண்.572 – அங்கீகரிக்கப்பட்டது

35. இம்மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 600 MM PSC Pipe Line லுள்ள திட்டுவிளை ரோடு, அரசன்குழி CSI.சர்ச் எதிர்புறம் அரசன் குழி பகுதியில் சரன் வீட்டு எதிர்புறம் நாவல்காடு ஊரில் உள்ள கதவு எண்.67 அருகுவிளை ரோடு, கதவு எண்.63 ஆகிய நான்கு இடங்களிலும் குடிநீர் பிரதான குழாய்யில் பழுது ஏற்பட்டு குடிநீர் விரயம்மாகிறது. அதனை சரி செய்ய உத்தேச செலவினம் தொகை ரூ.98000/- (தொண்ணுாற்றி எட்டாயிரம் மட்டும்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 9754/2020/இ2

## தீர்மானம் எண்.573 – அங்கீகரிக்கப்பட்டது

36. இம்மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pump House – III Unit No IV –லுள்ள 50 HP.Submersible Motor பழுதடைந்துள்ளதை சரிசெய்வதற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.81000/- (எண்பத்தி ஒன்றாயிரம் மட்டும்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 9756/2020/இ2

## தீர்மானம் எண்.574 – அங்கீகரிக்கப்பட்டது

37. நாகர்கோவில் நகராட்சிக்கு எதிராக நாகர்கோவில் நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வந்ததினால் நகராட்சி சார்பாக வழக்குகளை ஏற்று நடத்திட மூத்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்களை மன்ற தீர்மானம் எண்.808, நாள்.13.12.2017 இன்படி 16.12.2017 முதல் மூன்றாண்டுகளுக்கு நகராட்சி வழக்கறிஞராக (Standing Counsel) நியமனம் செய்யப்பட்டு வழக்கினை நடத்தி வந்துள்ளார்கள்.

இந்நிலையில் 01.03.2019 முதல் நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருவதினால் தொடர்ந்து மாநகராட்சி வழக்குகளில் நாகர்கோவில் நீதிமன்றத்தில் ஆஜராகி மாநகராட்சி வழக்கறிஞராக (Standing Counsel) திரு.எம்.எஸ்.மூர்த்தி வழக்கறிஞர் அவர்களை மீள் நியமனம் செய்து மாமன்ற தீர்மானம் எண்.580, நாள்.29.11.2019 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது திரு.எம்.எஸ்.மூர்த்தி மாநகராட்சி வழக்கறிஞரின் பதவி காலம் 15.12.2020 இல் மூன்றாண்டு முடிவடைவதால் அன்னார் ஏற்று நடத்தி வரும் வழக்குகளின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு 16.12.2020 முதல் மூன்றாண்டுகளுக்கு மீண்டும் மாநகராட்சி வழக்கறிஞராக (Standing Counsel) திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்களை நியமனம் செய்ய அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1839/2006/எப்2

## தீர்மானம் எண்.575 – அங்கீகரிக்கப்பட்டது

38. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் முடிவுற்ற அனைத்து கடைகளுக்கும் 12-01-2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் அண்ணா பேருந்து நிலையம் கேப்ரோட்டில் கடை எண் 9/5-88A மற்றும் 9/5-88B யும் அடங்கும்.

மேற்படி கடை எண் 9/5-88A மற்றும் 9/5-88B ___க்கு 12-01-2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு. உதய ஆனந்த் என்பவர் கடை எண் 9/5-88A-க்கு வைப்புத் தொகையாக ரூ 2,00,000/- செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்டு மிகவும் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 2,40,000/- என கேட்டிருந்தார். மேற்படி கடைக்கு மாத

வாடகை ரூ 2,00,000/- மேல் பொது ஏலத்தில் கேட்கபட்டதால் மாநகராட்சி ஆணையர் அவர்கள் ரூ 2,00,000/- மேல் பொது ஏலத்தில் ஏல கேள்வி கேட்கபட்டதால் உயர்ந்தபட்ச மாத வாடகையாக கேட்ட திரு. உதய ஆனந்த் என்பவரிடம் வைப்புத் தொகை ரூ 10,00,000/- செலுத்தப்படவேண்டும் என்றும் முதலில் ரூ 2,00,000/- செலுத்தியுள்ளதால் மீதமுள்ள தொகை ரூ 8,00,000/- உடனடியாக செலுத்தப்பட வேண்டும் என்று நேரடியாக உத்தரவு பிறப்பித்ததின் அடிப்படையில் திரு. உதய ஆனந்த் என்பவர் மீதமுள்ள வைப்புத் தொகை ரூ 8,00,000/- வங்கி வரைவோலையாக செலுத்தினார். மேலும் பொது ஏலம் அறிவிப்பில் நகராட்சி நிதியிழப்பை தவிற்கும் பொருட்டு **"ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஏலம் உறுதி செய்தபின்னர் ஒரு வருட குத்தகை உரிமை தொகையை முன் வைப்புத் தொகையாக உடனே செலுத்த வேண்டும்"** என்ற அடிப்படையில் திரு. உதய ஆனந்த் என்பவர் மேற்படி கடைக்கு 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை ரூ28,80,000/- வரைவோலையாக மாநகராட்சியில் செலுத்தியிருந்தார்.

கடை எண் 9/5-88B-க்கு திரு. அர்ஜீன் என்பவர் வைப்புத் தொகையாக ரூ 2,00,000/- செலுத்தி பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 2,00,000/- என கேட்டிருந்தார். மேலும் பொது ஏலம் அறிவிப்பில நகராட்சி நிதியிழப்பை தவிற்கும் பொருட்டு **"ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஏலம் உறுதி செய்தபின்னர் ஒரு வருட குத்தகை உரிமை தொகையை முன் வைப்புத் தொகையாக உடனே செலுத்த வேண்டும"** என்ற அடிப்படையில் திரு. அர்ஜீன் என்பவர் மேற்படி கடைக்கு 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை ரூ 24,00,000/- வரைவோலையாக நகராட்சியில் செலுத்தியிருந்தார்.

வரப்பெற்ற வரைவோலைகள் அனைத்தும் 07-02-2018 அன்றைய வங்கி செல்லான் மூலம் நகராட்சி கணக்கில் வரவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இரண்டு கடைகளையும் உரிமம் எடுத்திருந்த திரு. உதய ஆனந்த் மற்றும் திரு. அர்ஜீன் என்பவர்களுக்கு பல முறை நேரிலும், இவ்வலுவலக 24-07-2018 தேதிய அறிவிப்பு மூலமாகவும் கடையின் சாவியினை பெற்றுக்கொள்ளவும், அக்கடைக்கான ஒப்பந்தப்பத்திரம் சமர்ப்பிக்க தெரிவித்தும் மேற்படியாளர்கள் அதனை உதசீனபடுத்தி, மெத்தனமாகவும், வேண்டுமென்றே நகராட்சியின் நற்பெயரை கெடுக்கவும், நகராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நடந்துக்கொண்டார்கள். மேலும் மேற்படி கடையினை வேறு யாரும் எடுத்துவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் பொது ஏலத்தில் வாடகையினையும் உயர்த்தி எடுத்துள்ளார்கள். மேலும் நாகர்கோவில் மாநகராட்சிக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் கடை எண் 9/5-88A-க்கு தான் செலுத்திய வைப்புத் தொகை அனைத்தும் திரும்ப வழங்கப்பட வேண்டும் என திரு. உதய ஆனைந்த் என்பவரால் வழக்கு எண் W,P.No. 15577/2018 மற்றும் கடை எண் 9/5-88B-க்கு தான் செலுத்திய வைப்புத் தொகை அனைத்தும் திரும்ப வழங்கப்பட வேண்டும் என திரு. அர்ஜீன் என்பவரால் வழக்கு எண்W,P.No. 15578/2018 வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மாநகராட்சி மேற்படி வழக்கிற்கு எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கு நடைபெற்றது.

இந்நிலையில் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய மாத வாடகையினை செலுத்தாததால் மாநகராட்சியின் நிதியிழப்பினை தவிற்கும் பொருட்டு கடை எண் 9/5-88A-க்கு 01-04-2018 முதல் 31-03-2019 முடிய 12 மாத வாடகை ரூ 28,80,000/- மற்றும் 18% GST ரூ 5.18.400/- ஆக மொத்தம் ரூ 33,98,400/- செலுத்தாத காரணத்தினால் அன்னார் செலுத்திய வைப்புத் தொகை மற்றும் 12 மாத வாடகை முன் வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்யப்பட்டது. மேலும் கடை எண்` 9/5-88B-க்கு 01-04-2018 முதல் 31-03-2019 முடிய 12 மாத வாடகை ரூ 24,00,000/- மற்றும் 18% GST ரூ 4,32,000/- ஆக மொத்தம் ரூ 28,32,000/- செலுத்ததாத காரணத்தினால் அன்னார் செலுத்திய வைப்புத் தொகை மற்றும் 12 மாத வாடகை முன்வைப்புத் தொகை இருந்து ரூ 26,00,000/- ஈடு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 2019 மாதத்திற்கான மாத வாடகை ரூ 2,00,000/- மற்றும் GST ரூ 36,000/- ஆக மொத்தம் ரூ 2,36,000/- நிலுவை தொகை திரு. அர்ஜீன் என்பவர் செலுத்தப்பட வேண்டும். பின்னர் இரண்டாமாண்டு நிதியிழப்பை தவிற்கும் பொருட்டு இந்நகராட்சி நகர் மன்ற தீர்மான எண் 283, நாள் 28-06-2018-ன்படி மேற்படி இரண்டு கடைகளையும் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி கடைகளுக்கு 07-12-2018 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்றைய தினம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கடை எண் 9/5-88A-க்கு மாத வாடகையாக ரூ 1,00,000/- என்றும் கடை எண் 9/5-88B-க்கு மாத வாடகையாக ரூ 90,000/- என்று கேட்கப்பட்டது. மேற்படி இரண்டு கடைகளுக்கும் இன்னும் உயர்ந்தபட்ச வாடகையினை எதிர்நோக்கி மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேலும் கடை எண் 9/5-88A-ஐ மாத வாடகையாக ரூ 1,00,000/-க்கு உரிமம் கொடுக்கும் பட்சத்தில் மீதமுள்ள இரண்டாண்டுகளுக்கு நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பு ரூ 33,60,000/-க்கு திரு. உதய ஆனந்த் பொறுப்பாவீர்கள் என்றும் அத்தொகையினை தாங்களிடமிருந்து வசூலிக்கப்படும் என்றும் இவ்வலுவலக 19-01-2019 தேதியிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது. மேலும் கடை எண் 9/5-88B-ஐ மாத வாடகையாக ரூ 90,000/- க்கு உரிமம் கொடுக்கும் பட்சத்தில் மீதமுள்ள இரண்டாண்டுகளுக்கு நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பு ரூ 26,40,000/-க்கு திரு. அர்ஜீன் பொறுப்பாவீர்கள் என்றும் அத்தொகையினை தாங்களிடமிருந்து வசூலிக்கப்படும் என்றும் இவ்வலுவலக 04-01-2019 தேதியிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இவ்வறிவிப்பு கடிதங்களுக்கு மேற்படியார்களிடம் இருந்து இதுநாள்வரை எந்த பதிலும் வரவில்லை.

இந்நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளைவழக்கு எண் W,P.No. 15577/2018 மற்றும் வழக்கு எண் W,P.No. 15578/2018-க்கான 14-02-2019 தேதியிட்ட தீர்ப்பரை வரப்பெற்றது. வரப்பெற்ற தீர்ப்புரையில் திரு. உதய ஆனந்த் மற்றும் திரு. அர்ஜீன் என்பவர்கள் மாநகராட்சியில் செலுத்திய வைப்புத் தொகையுடன் ஆறு சதவீதம் வட்டியுடன் கொடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்படி வரப்பெற்ற தீர்ப்புரைக்கு எதிராக நாகர்கோவில் மாநகராட்சி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீடு வழக்கு எண் W.A (MD) No. 500/2019 மற்றும் W.A (MD) No. 501/2019 வழக்கு நடைபெற்று வந்தது. மேற்படி மேல் முறையீடு வழக்கின் தீர்ப்புரை 14-08-2019 தேதியன்று மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை வழங்கியது. மேற்படி தீர்ப்புரையில் 14-02-2019 தேதியில் வரப்பெற்ற தீர்ப்புரையில் தெரிவித்துள்ள ஆறு சதவீத வட்டித்தொகையினை தவிர்த்து திரு. உதய ஆனந்த் மற்றும் திரு. அர்ஜீன் செலுத்திய வைப்புத் தொகையினை 8 வாரத்திற்குள் வழங்ப்பட வேண்டும் என உத்தரவு பிரப்பித்துள்ளது.

மேலும் நாகர்கோவில் மாநகராட்சிக்கு திரு. உதய ஆனந்த் கடை எண் 9/5-88A-க்கு 01-04-2018 முதல் 31-03-2019 முடிய 12 மாத வாடகை ரூ 28,80,000/- மற்றும் 18% GST ரூ 5,18,400/- ஆக மொத்தம் ரூ 33,98,400/- செலுத்தாத காரணத்தினால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டது. ஆதலால் அன்னார் செலுத்திய வைப்புத் தொகை மற்றும் 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை ரூ 38,80,000/-ல் இருந்து ஈடு செய்யப்பட்டது. மேலும் திரு. அர்ஜீன் கடை எண் 9/5-88B-க்கு 01-04-2018 முதல் 31-03-2019 முடிய 12 மாத வாடகை ரூ 24,00,000/- மற்றும் 18% GST ரூ 4,32,000/- ஆக மொத்தம் ரூ 28,32,000/- செலுத்ததாத காரணத்தினால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டது. ஆதலால் அன்னார் செலுத்திய வைப்புத் தொகை மற்றும் 12 மாத வாடகை முன்வைப்புத் தொகை ரூ 26,00,000/-ல் இருந்து ஈடு செய்யப்பட்டது. மார்ச் 2019 மாதத்திற்காக மாத வாடகை ரூ 2,00,000/- மற்றும் GST ரூ 36,000/- ஆக மொத்தம் ரூ 2,36,000/- நிலுவை தொகை திரு. அர்ஜீன் என்பவர் செலுத்தப்பட வேண்டும். இதனை கருத்தில் கொண்டு மேற்படி மேல் முறையீடு தீர்ப்புரைக்கு எதிராக மாண்பமை உச்சநீதி மன்றம் டெல்லியில் மேல் முறையீடு வழக்குகள்SLP No. 012743, 012744/2020 தொடரப்பட்டது. மேற்படி வழக்கினை மாண்பமை உச்சநீதி மன்றம் 27-10-2020 அன்று தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

எனவே மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை மேல் முறையீடு தீர்ப்புரையில் தெரிவித்துள்ளபடி திரு. உதய ஆனந்த் என்பவருக்கு ரூ 38,80,000/- மற்றும் திரு. அர்ஜூன் என்பவருக்கு ரூ 26,00,000/- தொகையினை 5 தவணையாக செலுத்துவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7841/2017/அ13

**தீர்மானம் எண்.576 – அங்கீகரிக்கப்பட்டது**

39. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி.ராமசாமி ஐயர் நினைவு பூங்காவினை சுற்றியுள்ள பகுதிகளிலும், பூங்காவின் எதிர்புறம் உள்ள கோர்ட் ரோட்டிலும் சாலையோரங்களில் ஆக்கிரமித்து இருசக்கர வாகனங்கள், மூன்று நான்கு சக்கர வாகனங்களை பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் உரிமையாளர்களால் நிறுத்தம் செய்யப்பட்டு வருகிறது.. மேற்படி வாகனங்களுக்கு கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படாமல் உள்ளது. இம் மாநகராட்சிக்கு வருவாய் வரும் வகையிலும் வாகனங்களை முறையாக ஒழுங்குபடுத்திடும் பொருட்டும் இருசக்கர வாகனம் நாள் ஒன்றுக்கு ரூ.5/-, மற்றும் மூன்று / நான்கு சக்கர வாகனங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.20/- வீதம் தற்காலிகமாக இம்மாநகராட்சி பணியாளர்களை கொண்டு துறை மூலம் 01.12.2020 –ம் தேதி முதல் கட்டணம் வசூல் செய்திடவும், துறை மூலம் வசூல் செய்திட தேவையான ரசீது புத்தகங்களை காசாளர் வழியாக அச்சடித்திடவும் மன்ற முன்அனுமதியுடன் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு..

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.577 – அங்கீகரிக்கப்பட்டது**